**தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களம்**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம

தலைப்பு 237 – தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் ஆகியவற்றினை உள்ளடங்குகின்ற 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(1) நிதிக்கூற்றுக்கள் பிரிவின் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 28 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களத்திற்குரிய விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 02 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படுகின்றது.

தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதி செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைய நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்க்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேன்றி இலங்கை விமான கடற்படையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோககத்தில் அல்ல.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதீப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

### 1.5 ஏனைய தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) ஆம் பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் சீராக உள்ளது,

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் அமுல்படுத்தப்பட்டுள்ளன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவு முகாமைத்துவம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | பாதீட்டு மதிப்பீட்டில் ஏற்பாடுகளினை மேற்கொள்ளாமல் மூலதனச்சொத்துக்களினை மறுசீரமைத்தல் மற்றும் மேம்படுத்தலின் கீழ் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களுக்காக (237-1-1-0-2002-0/11) நி.பி 66 இன் மூலம் ரூபா 834,000 ஏற்பாடுகள் ஏற்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டின் பாதீட்டு மதிப்பீட்டினுள் நோக்கவிடயத்தின் 237-01-01-2002(11) கீழ் எவ்வித ஏற்பாடுகளும் ஒதுக்கிடப்பட்டிருக்கவில்லை என்பதுடன் 2023 ஆம் ஆண்டிற்கான (யூலை – ஆகஸ்ட் - 2022) பாதீட்டு மதிப்பீட்டினை தயாரிக்கும் போது இந்த திணைக்களத்தின் இயந்திரம் செயலில் இருந்தமையினால் இயந்திரம் மற்றும் உபகரணங்களிற்காக ஏற்பாடு செய்யவேண்டிய அவசியம் எழவில்லை. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவு மதிப்பீடுகள் சரியாகவும் துல்லியமாகவும் தயாரிக்கப்பட வேண்டும். |
| (ஆ) | அடிப்படை மதிப்பீட்டில் இருந்து போதுமான ஒதுக்கீடுகளின்றி குறைநிரப்பு மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் மற்றும் நி.பி 66 என்பவற்றின் ஊடாக 02 நோக்கவிடயத்திற்காக மொத்தமாக ரூபா 36,212,297 | பிராந்திய அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்டிருந்த உத்தியோகத்தர்கள் திணைக்களத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளதுடன், 2023 பாதீட்டு மதிப்பீட்டினை தயாரிக்கும் போது வெளிநாட்டு பயணத்திற்காக | - மேற்படி - |

| | | | |
|---|---|---|---|
| | மேலதிக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன், இது அந்த நோக்கவிடயங்களின் ஆரம்ப மதிப்பீட்டு ஏற்பாட்டின் 33 முதல் 527 சதவீதம் வரை இருந்தது. | ரூபா 7,500,000 கோரப்பட்ட போதிலும் திணைக்கள பாதீட்டில் இருந்து ரூபா 500,000 தொகை மாத்திரம் ஒதுக்கிடப்பட்டது. | |
| (இ) | திணைக்களித்தின் கீழ் உலக உணவு செயற்திட்டத்தினை (WFP) அமுல்படுத்தும் நோக்கில் 2023 ஆம் ஆண்டில் 237-1-2-2-2202-0/13 ஆம் இலக்க நோக்கவிடயத்தின் கீழ் ரூபா 1,250,000,000 தொகையும் 237-1-2-2-2202-0/17 ஆம் இலக்க நோக்கவிடயத்தின் கீழ் ரூபா 550,000,000 தொகையும் உள்ளடக்கி மொத்தமாக ரூபா 1,800,000,000 தொகை பாதீடு மதிப்பீடுசெய்த போதிலும், 2023 ஆம் ஆண்டில் இந்த செயற்திட்டத்தினை ஜனாதிபதி அலுவலகம் அமுல்படுத்த தீர்மானித்து, இந்நோக்கத்திற்காக ஜனாதிபதி செலவுத் தலைப்பிற்கு மேலதிக ஏற்பாடு மேற்கொள்ளப்பட்ட போதிலும், திணைக்களத்தின் மேல்குறிப்பிடப்பட்ட இரு நோக்கவிடயத்திற்காக ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்தம் ரூபா 1,800,000,000 தொகை ஏற்பாட்டினை முறையாக ஓதுக்கம் செய்யப்படப்படவில்லை. அதன்படி, மேலுள்ள இரு நோக்கவிடயத்தின் கீழ் உள்ள ஏற்பாடு சேமிப்பாக காட்டப்பட்டுள்ளது. | 2023 ஆம் ஆண்டிற்காக பாராளுமன்றத்தில் 2023 ஆம் ஆண்டின் பாதீட்டினை அங்கீகரித்த பின்னர் ஜனாதிபதி செயலாளரின் வேண்டுகோளின் பேரில் ஜனாதிபதி செயலகத்தின் ஊடாக WFP செயற்திட்டத்தினை அமுல்படுத்த தீர்மானித்த காரணத்தினால் 2023 ஆம் ஆண்டில் ஒதுக்கிடப்பட்ட ஏற்பாடு பயன்படுத்தாமல் காணப்பட்டது. பாதீட்டு திணைக்களத்தினால் 2023.01.23 ஆம் திகதிய கடிதத்தின் ஊடாக இது தொடர்பாக ஒதுக்கம் செய்யப்பட்டு இருக்கின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. ஆகையினால், எங்களுடைய திணைக்களத்தின் கீழ் அந்த ஏற்பாடுகள் ஒதுக்கம் செய்யப்பட்டுள்ளன. இந்த நிகழ்வானது இந்த திணைக்களத்தின் வெளியிலுள்ள பணி என்று தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். | நிதிப் பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவு மதிப்பீடு துல்லியமாகவும், முறையாகவும் தயாரிக்கப்பட வேண்டும் என்பதுடன், பாதீட்டு ஒதுக்கீடுகளினை முறையாக பயன்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயல்திறன்

#### 3.1.1 வெளிநாட்டு நிதி செயற்திட்டம்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கீழ் வெளிநாட்டு கடன்கள் அல்லது உதவிகள் மூலம் அமுல்படுத்தப்பட்ட உணவுப்பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி | உணவுப்பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி செயற்திட்டத்தின் கீழ் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சீஆர்எம் (CRM) முறைமை புதுப்பிக்கப்பட வேண்டியிருந்தது. | தேவை சரியாக இனங்காணப்பட்டு ஏற்பாடுகள் ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| | செயற்திட்டத்தின் கீழ் 237-1-1-20-2106-0/13 ஆம் விடய இலக்கத்திற்கான 2023 ஆம் ஆண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட மொத்த தேறிய ஒதுக்கீடு ரூபா 34,788,249 பயன்படுத்தப்படாமல் விடப்பட்டுள்ளது. | எனினும், கொமர்ஷல் வங்கிகள் ஊடாக அஸ்வெசும இன் கீழ் மானியக் கொடுப்பனவு மேற்கொள்ளப்பட்டதனால் சீஆர்எம் முறைமை ஊடாக மானியக் கொடுப்பனவை மேற்கொள்வதற்கு அந்த நேரத்தில் அவசியமிருக்கவில்லை. | என்பதோடு, செயற்திட்ட நோக்கங்களினை பூர்த்தி செய்வதற்கு மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் வினைத்திறனாக பயன்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | மதிப்பீடுகளினை ஒதுக்கீடு செய்யும் போது தவறான நோக்கநிகழ்ச்சியின் கீழ் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டமை, செயற்திட்டத்தின் இறுதியில் பட்டியல்களின் தீரப்பனவு மற்றும் மதிப்பீடு செய்யப்பட்ட ஏற்பாடுகள் போதாமை போன்ற காரணங்களினால் 04 செயற்திட்டத்திற்காக ஆரம்ப மதிப்பீடுகளின் ஏற்பாடு செய்யப்படாமல் மீளாய்வாண்டின் 11 நோக்கநிகழ்ச்சிக்காக மொத்தம் ரூபா 21,248,932,166 தொகை ஆரம்ப மதிப்பீட்டு ஒதுக்கீடுகள் மற்றும் நி.பி 66 என்பவற்றின் ஊடாக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன. | உணவு பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவவர உதவி செயற்திட்டத்தின் சரியான நோக்கநிகழ்ச்சியின் கீழ் கணக்கீடு செய்வதற்காகவும், எதிர்பாராத மற்றும் அவசர பதிலளிப்பு கூறுகளின் (CERCs) பட்டியல் கொடுப்பனவு, இலங்கை சந்தை கூட்டமைப்பு (PALAM/A) செயற்திட்டத்தின் ஊடாக வெளிநாட்டு மானியம் (13) என்பவற்றுக்காக 2023 ஆம் ஆண்டில் இலங்கையினால் பெறப்பட்ட உதவிகளின் நிதிப் பெறுமதி அண்ணவாக ரூபா 873 மில்லியன் ஆக இருக்கும் என மதிப்பிடப்பட்டுள்ளது மற்றும் துறைமுகத்திலிருந்து மூலப்பொருள் உதவியினை விடுவிப்பதற்கு வரிகள் மற்றும் கட்டணங்கள் செலுத்த வேண்டியிருந்ததால் சமூக ஸ்திரதன்மையினை நிலைநாட்டுதல் தொடர்பான உர இறக்குமதிக்கான வழங்குனர்களின் ஒருவரினால் பொருத்தமான ஆவணங்கள் சமர்ப்பிக்கப்படாமையினால் 2022 ஆம் ஆண்டில் பூர்த்தி செய்ய இயலாமல்போனமை காரணமாக குறைநிரப்பு மதிப்பீடு மற்றும் நி.பி 66 என்பவற்றின் ஊடாக செயற்திட்ட ஏற்பாடுகளினை அமைக்க வேண்டியிருந்தது. | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவு மதிப்பீடகள் சரியதகவும் துல்லியமாகவும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | திணைக்களத்தின் கீழ் அமுல்படுத்தப்படும் உணவுப்பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி செயற்திட்டம் மற்றும் இலங்கை சந்தை கூட்டமைப்பு (PALAM/A) செயற்திட்டம் என்பவற்றுக்காக ஒதுக்கிடப்பட்ட ரூபா 8,902,500,000 மொத்த மதிப்பீட்டில், ரூபா 7,443,648,823 தொகையினை இந்த நோக்கவிடயத்தில் ஒதுக்கிடப்பட்ட | உணவுப்பாதுகாப்பு மற்றும் வாழ்வாதார மீட்பு அவசர உதவி செயற்திட்டத்தின் சரியான நோக்க நிகழ்ச்சியின் கீழ் கணக்கிடுவதற்காக நி.பி 66 இன் பிரகாரம் ஏற்பாடுகள் மாற்றப்பட்டது. சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் மென்பொருள் முறைமையினை அபிவிருத்தி செய்வதற்காக ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டது. பின்னர் காலத்தின் தேவையாக இது | நிதிப்பிரமாணம் 50 இன் பிரகாரம் வருடாந்த செலவு மதிப்பீடகள் சரியதகவும் துல்லியமாகவும் மதிப்பீடு செய்யப்பட வேண்டும். |

| | |
|---|---|
| நோக்கவிடயத்தில் இருந்து ஏனைய நோக்கவிடயத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. ஒதுக்கீடு செய்யப்பட்ட ஏற்பாட்டின் 82 சதவீதம் தொடக்கம் 100 சதவீதம் வரை மாற்றப்பட்ட தொகையின் வீச்சில் உள்ளதுடன், தவறான நோக்கநிகழ்ச்சியின் கீழ் மதிப்பிடப்பட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை மற்றும் அந்த ஒதுக்கீடுகள் தேவைப்பட்டிருக்காத அதேவகையில் மாற்றத்துக்காக விளைவினை ஏற்படுத்தியமை போன்ற காரணங்கள் அவதானிக்கப்பட்டது. | இருக்கவில்லை. PALAM/A செயற்திட்டத்தின் கீழ் வழங்கப்பட்ட மூலப்பொருள் உதவி மற்றும் சுங்கத்திலிருந்து மூலப்பொருள் உதவியினை விலக்களிப்பது தொடர்பான கிரயங்கள் சரியான நோக்கவிடயத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட வேண்டும் என நி.பி 66 இன் பிரகாரம் ஏற்பாடு மாற்றப்பட்டுள்ளது. |

## 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரசாங்க நிறுவனங்களுக்கான அரச இலத்திரனியல் பெறுகை முறைமையினை அறிமுகம் செய்தல் தொடர்பாக 2018 ஒக்தோபர் 23 ஆம் திகதிய 05/2018 ஆம் இலக்கமும் 2019 திசெம்பர் 17 ஆம் திகதிய 08/2019 ஆம் இலக்கமும் பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் பொது பெறுகை நிறுவனங்களினால் தேடிப்பெறுதல்/வாங்குதல் முறைமையின் கீழ் பெறுகையில் இலத்திரனியல் பெறுகை முறைமையை பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும், தேசிய பெறுகை திணைக்களத்தினால் 2023 ஆம் ஆண்டில் 14 நிகழ்வுகளில் மொத்தம் ரூபா 2,008,935 தொகையான பண்டங்களினை தேடிப்பெறுதலின் கீழ் இலத்திரனியல் பெறுகை முறைமையினை பயன்படுத்தாமல் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. | 2023 ஏப்ரல் 05/04 ஆம் திகதியில் இந்த முறைமையினை பயன்படுத்துதல் பற்றிய விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டம் அரசாங்க இலத்திரனியல் பெறுகை செயலகத்தினால் ஆரம்பிக்கப்பட்டது. 2023 ஆம் ஆண்டில் இலத்திரனியல் முறைமையின் பயன்பாடு பற்றி போதிய அறிவினை அதிகாரிகள் கொண்டிருக்கவில்லை. எனினும், 2024 ஆம் ஆண்டில் இருந்து இந்த முறைமை ஊடாக பெறுகையினை எடுத்துச் செல்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. | பெறுகையினை மேற்கொள்வதில் தொடர்புடைய சுற்றறிக்கையின் ஏற்பாடுகள் பின்பற்றப்பட வேண்டும். |

## 3.3 சொத்து முகாமைத்துவம்

### 3.3.1 வாகனங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திணைக்களத்திற்கு சொந்தமான 04 வாகனங்கள் திணைக்களத்தின் பாவனைக்காக பயன்படுத்தப்படாமல் நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சு மற்றும் நிதி அபிவிருத்தி திணைக்களம் என்பவற்றுக்கு முறையான பரிமாற்றம் இல்லாமல் வழங்கப்பட்டுள்ளது. | தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கடமைத் தேவைக்கு அமைய அந்த வாகனங்கள் கூறப்பட்ட திணைக்களத்திற்கு மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும். நிதி, பொருளாதார ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கைகள் அமைச்சுக்கு தற்காலிகமாக ஒப்படைக்கப்பட்ட WP KQ-6923 இலக்கத்தையுடைய வாகனம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் கடமைக்காக மீண்டும் எடுத்துக்கொள்ளப்படும். | முறையான வழியில் வாகனங்களினை மாற்றுவதற்கோ அல்லது திணைக்களத்திற்கு அவைகளை மீண்டும் பெறுவதற்கோ ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது திணைக்களத்தின் இரு கார்கள் விபத்தொன்றுடன் சம்பந்தப்பட்ட பின்னர் 2024 ஏப்ரல் 10 இல் முறையே 08 மாதங்கள் மற்றும் 04 மாதங்கள் கடந்தபோதிலும் நி.பி 104(4) இன் பிரகாரம் மோட்டார் வாகன விபத்துக்கள் பற்றிய முழுமையான அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படவில்லை என்பதுடன் கார்களுக்கு ஏற்பட்ட இழப்பை சம்பந்தப்பட்ட தரப்பினர்களிடம் இருந்து அறவிடுவதற்கு திணைக்களத்தினால் எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | திணைக்களத்திற்கு சொந்தமான WP KQ 6923 இலக்கமுடைய வாகனத்தின் பழுதுபாரக்கும் பணிகள் நிறைவடைந்த பின்னரும், மற்றும் 2023.12.21 இல் WP KP 5871 இலக்கம் கொண்ட வாகனம் விபத்துக்குள்ளானது தொடர்பாக நியமிக்கப்பட்ட விசாரணை சபையின் அறிக்கை பெற்ப்பட்ட பின்னரும் நி.பி 104(4) இன் பிரகாரம் முழு அறிக்கையொன்று சமர்ப்பிக்கப்படும். WP KP 5871 மற்றும் WP KQ 6923 கொண்ட 02 கார்கள் தொடர்பாக நி.பி 104 இன் பிரகாரம் இடம்பெற்ற இறுதி பரீட்சிப்பு அறிக்கையின் பரிந்துரைக்கு அமைய மேலதிக நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் மோட்டார் வாகன விபத்து தொடர்பாக விரைவாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

**4.1 அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உண்மையான பதவியணி**

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்ட பணியாளர்களின் தரவுகளுக்கு அமைவாக 2023 திசெம்பர் 31 இல் உள்ளபடியாக திணைக்களத்தில் உள்ள வெற்றிடங்களின் மொத்த எண்ணிக்கை 28 ஆக இருந்ததோடு, வெற்றிடங்களினை நிரப்புவதற்கோ அல்லது அனுமதிக்கப்பட்ட பதவிகள் எண்ணிக்கையை திருத்துவதற்கோ மீளாய்வாண்டின் போது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. | ஏற்றுக்கொள்ளப்படுகிறது. | வெற்றிடங்களினை நிரப்புவதற்கு அல்லது பதவியணியை இற்றைப்படுத்துவதற்கு முறையானதொரு வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |